PosTear

Poster mars the beauty of the city . ExNoRa has PosTEAR campaign from 1992. . Now the Mayor , Mr Ma Su has taken up the work of removing posters & beautiful paintings the walls. Success to ExNoRa

7th SENSE MASTER

ExNoRa NIRMAL BASU, GPian

@mbnirmal

NEWS TODAY

THURSDAY 18 JUNE 1992

2,000 volunteers deployed for clean up operation

War on posters begins Sunday

Madras, June 18:

Close on the heels of its ordinance banning posters the State Government has ordered the police and civic authorities to implement the law without any delay, fear, or favour.

On Sunday, 2,000 volunteers will be deployed to remove posters from the walls of the city. Exnora will take a leading part in the campaign to make city beautiful, launched by Chief Minister Jayalalitha.

The clean up will start on Anna Salai at 7.30 on Sunday and would be completed by 1 p.m. The five service and corporation will help the volunteers in their task.

Once the walls are cleared of posters, the corporation will whitewash the wall.

Police Commissioner, R. Rajagopalan Deputy Commissioner of Police of South, Collector of Madras and corporation commissioner will supervise the entire operation.

The Police Commissioner told pressmen none will be spared for violations of the ordinance, including political posters.

The man who pastes the poster, organiser and if necessary the printer will be charged for disfigurement of public places.

The offence under the ordinance carries a fine of upto Rs. 1,000.

Till now 41 case were registered and 31 have been fined. The remaining poster offences are under investigation. He sought public cooperation in keeping the city beautiful.

Pressmen asked the Police Commissioner, how he proposed to deal with cinema posters. There are also other industries which very much depend on posters.

Rajagopalan replied that he was seized of this. They are considering provision of places for cinema posters. A decision will be taken by the government soon.

Nirmal started war on posters way back in 1992 which he called as PosTear . Now the Government is implementing it in letter & spirit

தினமணி

சென்னை - திங்கள்கிழமை - ஜூன் 22, 1992

'விளம்பர பலகைகளும் அகற்றப்படும்'

சென்னை அண்ணா சாலையில் சட்டவிரோதமாக வைக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் விளம்பரப் பலகைகள் அகற்றப்படும் என்று சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயஸ்ரீ பாலச்சந்தர் கூறினார்.

அண்ணா மேம்பாலத்தை அழகு செய்யும் வகையில் எக்ஸ்நோரா சமூக அமைப்பு ஏற்பாடு செய்திருந்த 'சுவரொட்டிகள் அகற்றும் பணி' நிகழ்ச்சியில் ஞாயிறன்று அவர் கலந்துகொண்டார்.

அண்ணா சாலை முழுவதும் சுவரொட்டிகள் அகற்றப்பட்டவுடன் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் தனியார் விளம்பரப் பலகைகள் அகற்றப்படும் என்றார் அவர்.

மேம்பாலத்தில் சுவரொட்டிகள் அகற்றப்பட்டவுடன் மறுபடியும் போஸ்டர்கள் ஒட்டப்படுவதைத் தடுக்க நெடுஞ்சாலைத் துறையினர் வெள்ளை அடிக்க வேண்டும் என்று நகர போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன் கேட்டுக்கொண்டார்.

சென்னை மாநகராட்சி கமிஷனர் அலாவுதீன், எக்ஸ்நோரா அமைப்பின் தலைவர் எம்.பி.நிர்மல் உள்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.

எழில் மிகு சென்னைக்கு அஸ்திவாரம்: அண்ணா மேம்பாலத்தில் சுவரொட்டிகளை அகற்றும் பணியில் மாணவ மாணவியர்களும் மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்களும் ஞாயிறன்று ஈடுபட்டனர். "எக்ஸ்நோரா" சமூக சேவை அமைப்பு இதற்கு ஏற்பாடு செய்திருந்தது.

City’s beauty marred by posters

Mayor swings into Action . Result Posters are removed

Walls are defaced by Political Advertisements

NEWS TODAY

THURSDAY 18 JUNE 1992

2,000 volunteers deployed for clean up operation

War on posters begins Sunday

Madras, June 18:

Close on the heels of its ordinance banning posters the State Government has ordered the police and civic authorities to implement the law without any delay, fear, or favour.

On Sunday, 2,000 volunteers will be deployed to remove posters from the walls of the city. Exnora will take a leading part in the campaign to make city beautiful, launched by Chief Minister Jayalalitha.

The clean up will start on Anna Salai at 7.30 on Sunday and would be completed by 1 p.m. The five service and corporation will help the volunteers in their task.

Once the walls are cleared of posters, the corporation will whitewash the wall.

Police Commissioner, R. Rajagopalan Deputy Commissioner of Police of South, Collector of Madras and corporation commissioner will supervise the entire operation.

The Police Commissioner told pressmen none will be spared for violations of the ordinance, including political posters.

The man who pastes the poster, organiser and if necessary the printer will be charged for disfigurement of public places.

The offence under the ordinance carries a fine of upto Rs. 1,000.

Till now 41 case were registered and 31 have been fined. The remaining poster offences are under investigation. He sought public cooperation in keeping the city beautiful.

Pressmen asked the Police Commissioner, how he proposed to deal with cinema posters. There are also other industries which very much depend on posters.

Rajagopalan replied that he was seized of this. They are considering provision of places for cinema posters. A decision will be taken by the government soon.

Nirmal started war on posters way back in 1992 which he called as PosTear . Now the Government is implementing it in letter & spirit

தமிழன்

சென்னை 22.6.92 திங்கட்கிழமை

சென்னை நகரை அழகுபடுத்தும் ஒரு பணியாக, அண்ணா மேம்பாலச் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த பல்வேறு சுவரொட்டிகளை மாணவ-மாணவிகள் கிழித்தபோது எடுத்தபடம்.

தினமணி

சென்னை - திங்கள்கிழமை - ஜூன் 22, 1992

'விளம்பர பலகைகளும் அகற்றப்படும்'

சென்னை அண்ணா சாலையில் சட்டவிரோதமாக வைக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் விளம்பரப் பலகைகள் அகற்றப்படும் என்று சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயஸ்ரீ பாலச்சந்தர் கூறினார்.

அண்ணா மேம்பாலத்தை அழகு செய்யும் வகையில் எக்ஸ்நோரா சமூக அமைப்பு ஏற்பாடு செய்திருந்த 'சுவரொட்டிகள் அகற்றும் பணி' நிகழ்ச்சியில் ஞாயிறன்று அவர் கலந்துகொண்டார்.

அண்ணா சாலை முழுவதும் சுவரொட்டிகள் அகற்றப்பட்டவுடன் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் தனியார் விளம்பரப் பலகைகள் அகற்றப்படும் என்றார் அவர்.

மேம்பாலத்தில் சுவரொட்டிகள் அகற்றப்பட்டவுடன் மறுபடியும் போஸ்டர்கள் ஒட்டப்படுவதைத் தடுக்க நெடுஞ்சாலைத் துறையினர் வெள்ளை அடிக்க வேண்டும் என்று நகர போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன் கேட்டுக்கொண்டார்.

சென்னை மாநகராட்சி கமிஷனர் அலாவுதீன், எக்ஸ்நோரா அமைப்பின் தலைவர் எம்.பி.நிர்மல் உள்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.

எழில் மிகு சென்னைக்கு அஸ்திவாரம்: அண்ணா மேம்பாலத்தில் சுவரொட்டிகளை அகற்றும் பணியில் மாணவ மாணவியர்களும் மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்களும் ஞாயிறன்று ஈடுபட்டனர். "எக்ஸ்நோரா" சமூக சேவை அமைப்பு இதற்கு ஏற்பாடு செய்திருந்தது.

தினகரன்

DINAKARAN MADRAS 22-6-92 திங்கட்கிழமை

★ சென்னை, கோவை, மதுரை, சேலம், திருச்சி, வேலூர், நெல்லை நகரங்களில் அச்சாகிறது ★

சென்னையில்

பெண் கலெக்டர் சுவரொட்டி கிழித்தார்!

போஸ்டர்கள் அகற்றும் பணி தொடங்கியது!!

சென்னை, ஜூன். 22-

சென்னை நகரை அழகுபடுத்தும் பணியையொட்டி அண்ணா மேம்பாலத்தில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் அகற்றப்பட்டன. பெண் கலெக்டர் ஜெயஸ்ரீ பாலசந்தர், அதிகாரிகள் போஸ்டர்களை கிழித்தனர்.

அழகுபடுத்துதல்

சென்னை நகரை அழகு படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுவர்களில் நோட்டீஸ் ஒட்டதை சட்டம் பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இதன் தொடர்ச்சியாக சென்னை நகரில் ஆங்காங்கே ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை கிழித்து வெள்ளை அடித்து சுத்தம் செய்யும் பணி தொடங்கப்பட்டது.

அண்ணா மேம்பாலம்

முதல் கட்டமாக அண்ணா மேம்பாலத்தை சுத்தப்படுத்தும் பணி நேற்று மேற் கொள்ளப்பட்டது. எக்ஸ்னோரா இண்டர்நேஷனல் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது.

இதற்கான விழா மேம்பாலம் அருகில் நடந்தது. விழாவில் கலந்து கொண்டு கலெக்டர் ஜெயஸ்ரீ பாலசந்தர், மாநகராட்சி கமிஷனர் அலாவுதீன், போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன் ஆகியோர் சுவரொட்டிகளை கிழித்து துப்புரவு பணியை தொடங்கி வைத்தனர்.

200 பேர்

அவர்களோடு பள்ளி மாணவ- மாணவிகள், எக்ஸ்னோரா இண்டர்நேஷனல் அமைப்பு உறுப்பினர்களும் போஸ்டர்களை கிழித்து அப்புறப்படுத்தினர். சுமார் 200 பேர் இதில் ஈடுபட்டனர். போஸ்டர்கள் கிழிக்கப்பட்டவுடன் அந்த இடத்தை தண்ணீர் ஊற்றி கழுவினார்கள்.

கலந்து கொண்டோர்

இந்த நிகழ்ச்சியில் போக்குவரத்து துணை கமிஷனர் கே.வி.எஸ்.மூர்த்தி, எக்ஸ்னோரா இண்டர்நேஷனல் தலைவர் எம்.பி.நிர்மல், தென் சென்னை மாவட்ட காங்கிரஸ் தலைவர் எஸ்.நாராயணன், பொதுச்செயலாளர் சிக்கந்தர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை எக்ஸ்னோரா இண்டர்நேஷனல் துணை செயலாளர் சுப்பிரமணியன். உறுப்பினர் விநாராயணன் செய்திருந்தனர்.

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

(மலர்: 19 22-6-92 திங்கள் மாலை வெளியூர் 23-6-92 செவ்வாய் இதழ்: 292)

சென்னை அண்ணாசாலையில்

"சட்டவிரோதமாக வைத்துள்ள தனியார் நிறுவன விளம்பர பலகைகள் அகற்றப்படும்"

சென்னை கலெக்டர் தகவல்

சென்னை, ஜூன். 22:

சென்னை - அண்ணாசாலையில் சட்டவிரோதமாக வைக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் விளம்பர பலகைகள் அகற்றப்படும் என்று சென்னை மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ பாலச்சந்தர் கூறினார்.

அண்ணா மேம்பாலத்தை அழகு செய்யும் வகையில் எக்ஸ்னோரா சமூக அமைப்பு ஏற்பாடு செய்திருந்த சுவரொட்டிகள் அகற்றும் பணி நிகழ்ச்சியில் நேற்று அவர் கலந்து கொண்டார்.

அண்ணாசாலை முழுவதும் சுவரொட்டிகள் அகற்றப்பட்டவுடன் போக்குவரத்து இடையூறாக இருக்கும் தனியார் விளம்பரப் பலகைகள் அகற்றப்படும் என்றார் அவர்.

சென்னை நகரை அழகுபடுத்தும் இட்டத்தின் ஒரு பகுதியாக, அதோடு பொதுமக்களுக்கு பாதுகாப்பை உறுதிப் படுத்தும் வகையில் சென்னை நகரில் மிக உயரமான கட்டிடங்கள் மீது நிறுத்தப்படும் விளம்பரப் பலகைகளை ஒழுங்குபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ பாலச்சந்தர் தெரிவித்தார்.

அண்ணா மேம்பாலம் பகுதியில் ஒட்டப்பட்டு இருக்கும் போஸ்டர்களை இழித்து, நகரை சுத்தப்படுத்தி அழகு படுத்தும் பணியில் 'எக்ஸ்நோரா' அமைப்போடு நேற்று இணைந்து செயல்பட்டபோது ஜெயஸ்ரீ பாலச்சந்தர் இதைத் தெரிவித்தார். போஸ்டர்களை இழித்து அப்புறப்படுத்தி அழகுபடுத்தும் பணியில் தனியார் தொண்டு நிறுவனங் களும் வலுவில் முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

பொது மக்களின் பூரண ஒத்துழைப்போடு, நகரை அழகுபடுத்திட முடியும் என்றார் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அலாவுதீன்.

நகரை அழகுபடுத்தும் முயற்சியில் தாங்களும் சுயமாக முன்வந்து ஒத்துழைக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன். நகரை அசிங்கப்படுத்தும் விதத்தில் சுவர்களை அலங்கோலமாக்கும் விதத்தில் இஷ்டப்படி போஸ்டர்கள் ஒட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

★ ஜூலை 4-ந்தேதி பாண்டிபஜார் பகுதியில், அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று எக்ஸ்நோரா இணைச் செயலாளர் வி.என்.சுப்பிர மணியம் தெரிவித்தார்.

20 X 25 அடி இடம்: முதல்வரிடம் மகஜர்

ஒவ்வொரு 500 மீட்டரிலும் 20 X 25. அடி இடத்தை விளம்பர பலகைக்காக ஒதுக்குங்கள் வேலையில்லாத பட்டதாரி, இந்த இடத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்கட்டும். விளம்பர பலகை வைப்பவர் களிடமிருந்து கிடைக்கும் தொகை, அவரது வருமானத்துக்கு வழிகாணும் என்று கோரும் மகஜர் ஒன்றை முதல்வரிடம் கொடுக்குமாறு கலெக்டர் ஜெயஸ்ரீ பாலச்சந்திரன் எக்ஸ்நோரா அமைப்பு கொடுத்தது.

மேம்பாலத்தில் சுவரொட்டிகள் அகற்றப்பட்டவுடன் மறுபடியும் போஸ்டர்கள் ஒட்டப்படுவதைத் தடுக்க நெடுஞ்சாலைத்துறையினர் வெள்ளை அடிக்கவேண்டும் என்று நகர போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன் கேட்டுக் கொண்டார்.

சென்னை மாநகராட்சி கமிஷனர் அலாவுதீன், எக்ஸ்னோரா அமைப்பின் தலைவர் எம்.பி. நிர்மல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

நிறுவனர் : டி. வி. ராமசுப்பையர்

சென்னை திங்கள் ஜூன் 22 1992 150காசு

சென்னையில் போஸ்டர் ஒட்ட தடை விதிக்கப்பட்டதை அடுத்து சென்னையில் அண்ணா மேம்பாலம் கீழ் போஸ்டர்கள் கிழிக்கும் பணி நடந்தது. பள்ளி மாணவிகளை எக்ஸ்னோரா சமூக சேவை அமைப்பு இதில் அமர்த்தியது. கமிஷனர் ராஜகோபாலனும் போஸ்டர் கிழிக்கிறார். (உள்படம்)

போஸ்டர்கள் அகற்றும் பணி கலெக்டர் தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூன் 22— எக்ஸ்னோரா அமைப்பின் சார்பில் அண்ணா மேம்பாலத்தில் போஸ்டர்கள் அகற்றும் பணி நேற்று நடைபெற்றது.

சமீபத்தில் தமிழகம் முழுவதிலும் விளம்பர போஸ்டர்களை ஒட்ட தமிழக அரசு தடை விதித்து உள்ளது. அதற்காக தமிழக அரசு அவசர சட்டம் ஒன்றையும் பிறப்பித்துள்ளது.

சமீபகாலங்களில் சென்னை நகரத்தின் முக்கிய அரசியல் தலைவர்கள் போஸ்டர்கள் ஒட்டப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் நகரின் அழகு கெடுவதுடன் சுற்றுப்புற சூழலும் பாதிக்கப்படுகிறது. மேலும் பல தனியார் மற்றும் பொதுத்துறை சுவர்களில் அனுமதி பெறாமல் சிலர் போஸ்டர்களை ஒட்டி விடுகிறார்கள். இதனால் பொதுமக்கள் பலருக்கு சிரமங்கள் ஏற்படுகின்றது.

இதை கருத்தில் கொண்டு தான் தமிழக அரசு போஸ்டர்கள் ஒட்டுவதற்கு தடை விதித்தது. இந்த சட்டத்தை மீறி போஸ்டர்களை ஒட்டுபவர்களுக்கு ஒரு ஆண்டு ஜெயில் தண்டனை அளிக்கப்படும் என்றும் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்து இருந்தது.

இந்த சட்டம் சென்னை நகரில் உடனடியாக அமல்படுத்தப்படுகிறது என்றும் தமிழக அரசு அறிவித்தது. இந்த சட்டத்தை அமல்படுத்தும் வகையில் சென்னை எக்ஸ்னோரா சங்கம் நேற்று அண்ணா மேம்பாலத்தில் ஒட்டப்பட்ட போஸ்டர்களை அகற்றும் பணியில் ஈடுபட்டது.

இந்த பணியை தொடங்கி வைக்கும் விழாவில் சென்னை கலெக்டர் ஜெயஸ்ரீ பாலச்சந்தர், மாநகராட்சி கமிஷனர் அலாவுதீன் மற்றும் சென்னை நகர போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் சென்னை மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ பாலச்சந்தர் கலந்து கொண்டு பேசியதாவது:

சென்னை நகரையும் அண்ணா மேம்பாலத்தையும் அழகுபடுத்த இந்த சமயத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த போஸ்டர்களை அகற்றும் பணியில் மாநகராட்சி, போலீஸ் மற்றும் எக்ஸ்னோரா சமூக சங்கங்களுடன் பொது மக்களும் ஈடுபட வேண்டும். அப்போது தான் தமிழக அரசு பிறப்பித்த சட்டத்தை நாம் இனிதே நிறைவேற்ற முடியும் என்று ஜெயஸ்ரீ பாலச்சந்தர் கூறினார்.

மாநகராட்சி கமிஷனர் அலாவுதீன் பேசும் போது, எழில்மிகு சென்னை 2000 நகரை உருவாக்கு வோம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்கு அண்ணா மேம்பாலத்தை அழகுபடுத்துவதே முதல் பணியாக அமைந்துள்ளது. சென்னையை அழகுபடுத்தும் பணியில் தன்னார்வ குழுக்கள் ஈடுபட முன் வரவேண்டும். சென்னை நகரில் போஸ்டர்கள் ஒட்டுவதை தடுத்தாலே நகரம் பாதி அழகு பெற்று விடும் என்று கூறினார்.

சென்னை நகர போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன் கூறும் போது, போஸ்டர்களை அகற்றுவதற்கு போலீஸ் எப்பொழுதும் துணையாக இருக்கும் என்றார். சினிமாத் துறைகளும் இந்த போஸ்டர்கள் மூலம் தான் விளம்பரப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் தான் பொது மக்கள் பல செய்திகள் தெரிய வருகின்றன. எனவே போஸ்டர்கள் பொதுமக்களுக்கு ஒரு 'கம்யூனிகேஷன் மீடியமாக' செயல்படுகிறது. இதை அழிக்கவும் முடியாது. எனவே கண்ட கண்ட இடங்களில் போஸ்டர்களை ஒட்ட வழிமுறைகளை அரசு வகுக்கப்படுக்க வேண்டும்.

இந்த போஸ்டர்களை ஒட்ட அரசு 20 அடி அகலம் மற்றும் 25 அடி நீளத்தில் பொது சுவர்களை 500 அடி இடைவெளியில் ஒதுக்கலாம். இந்த இடங்களை வேலையில்லா பட்டதாரிகளின் பராமரிப்பின் மேற்விட வேண்டும். மேலும் போஸ்டர்கள் ஒட்டப்படும் இந்த இடத்திற்கு குறைந்தபட்ச வாடகையும் வசூல் செய்யலாம். இது வேலையில்லா பட்டதாரிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

மேலும் பொதுமக்களுக்கு அதிகம் உபயோகப்படுத்தும் பகுதிகளில் போக்குவரத்திற்கும் பாதசாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் எந்த விதமான ஊறும் ஏற்படுத்தா வண்ணம் அமைக்க அரசு அனுமதி அளிக்க வேண்டும்.

இவ்வாறு கலெக்டரிடம் அளித்த மனுவில் கூறப்பட்டது.

அண்ணா மேம்பாலத்தில் போஸ்டர்களை அகற்றும் பணியில் எக்ஸ்னோரா நிர்வாகிகள், சர்ச் பார்க் பள்ளி மாணவிகள் உட்பட மூன்று பள்ளிகளை சேர்ந்த 70க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளும் 30க்கும் மேற்பட்ட மாநகராட்சி தொழிலாளர்களும் ஈடுபட்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
சென்னை (22-6-92) திங்கட்கிழமை
மலர் 50 இதழ் 233
பொன் விழா ஆண்டு
ஆங்கிரச ஜெ ஆனி மீ
ஹிஜ்ரி 1412 துல்ஹஜ்

சென்னை அண்ணா மேம்பாலத்தில்

சுவரொட்டிகளை அகற்றும் பணி தொடங்கியது

கலெக்டர், போலீஸ் கமிஷனர் கலந்து கொண்டனர்

சென்னை, ஜூன். 22-
சென்னை அண்ணா மேம்பாலத்தில் ஒட்டப்பட்டு இருந்த நோட்டீசுகளை கிழித்து, அண்ணா மேம்பாலத்தை அழகு படுத்தும் பணி நேற்று தொடங்கியது. இதில் கலெக்டர் ஜெயஸ்ரீ பாலசந்தர், போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவசர சட்டம்

பொது இடங்களில் நோட்டீசு ஒட்டுவதற்கு தடை விதித்து தமிழக அரசு அவசர சட்டம் பிறப்பித்துள்ளது.

இதைத் தொடர்ந்து, சென்னையில் போஸ்டர்களை அகற்றி, நகரை அழகுபடுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தொடங்கியது

சென்னையில் ஏற்கனவே ஒட்டப்பட்டு இருந்த போஸ்டர்களை கிழிக்க எக்ஸ்னோரா இண்டர்நேஷனல் அமைப்பு முடிவு செய்தது.

இந்த சுவரொட்டிகளை கிழித்து அழகு படுத்தும் பணி நேற்று சென்னை அண்ணா மேம்பாலம் அருகே நடந்தது. இந்த நிகழ்ச்சியில் கலெக்டர் ஜெயஸ்ரீ பாலசந்தர், மாநகராட்சி கமிஷனர் அலாவுதீன், போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன் ஆகியோர் கலந்து கொண்டு பாலத்தில் ஒட்டப்பட்டு இருந்த சினிமா மற்றும் விளம்பர போஸ்டர்களை கிழித்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

மாணவ-மாணவிகள்

பள்ளி மாணவ - மாணவிகள் மற்றும் எக்ஸ்னோரா - இண்டர்நேஷனல் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்து கொண்டு போஸ்டரை கிழித்து அவற்றை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். 200-க்கும் மேற்பட்டவர்கள் இந்த பணியில் ஈடுபட்டனர்.

பாலத்தின் மீது ஒட்டப்பட்டு இருந்த போஸ்டர்கள் மீது தண்ணீரை ஊற்றி அவற்றை இரும்பு குச்சியால் சுரண்டி மாணவிகள் அப்புறப்படுத்தினார்கள். உயரத்தில் ஒட்டப்பட்டு இருந்த சுவரொட்டிகளை ஏணியில் ஏறி கிழித்து அப்புறப்படுத்தினார்கள்.

போக்குவரத்து போலீஸ் துணை கமிஷனர் கே.வி.எஸ். மூர்த்தி, எக்ஸ்னோரா இண்டர்நேசனல் தலைவர் எம்.பி. நிர்மல், தென் சென்னை மாவட்ட காங்கிரஸ் தலைவர் நாராயணன், எம்.என். இக்கந்தர், சுபாஷ் ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

சென்னை அண்ணா மேம்பாலத்தில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை அப்புறப்படுத்தும் பணியை, கலெக்டர் ஜெயஸ்ரீ பாலசந்தர், போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன் ஆகியோர் சுவரொட்டிகளை கிழித்து தொடங்கி வைத்த போது எடுத்த படம். படத்தில் மாநகராட்சி கமிஷனர் அலாவுதீனும் இருக்கிறார்.

ஏராளமான பள்ளிக்கூட மாணவ - மாணவிகளும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சுவரொட்டிகளை கிழித்தனர்.

Wall scribbling are colour washed

PosTear

PosTear

PosTear

PosTear

PosTear

PosTear

We need scrubber
to remove the posters

Scrubber ,Brush ,Water bucket &
Volunteers to do remove posters.
Join ExNoRa's
PosTear today

Thank You!